REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✠ The Official Organ Of The D.P.F.

மலர் 4) சென்னை: தை 15உ திங்கள் (28—1—57) ★ ★ வெளியீடு: தை 16உ செவ்வாய் (29—1—57) (இதழ் 198

'முழு வளர்ச்சி பெறாத இந்தி நீதிமன்ற மொழியாக ஆகக்கூடாது'

சி. பி. இராமசாமி எதிர்ப்பு!

சென்னை, சன. 10—

"ஆங்கிலத்திற்குப் பதில் இந்திமொழி இடம்பெற வேண்டுமானுல் நெடுங்காலம் பிடிக்கும்; எனவே, அம்மொழி, முழுமையுமாக அபிவிருத்தியடைகிற வரையில், நீதிமன்ற மொழியாக இந்தி மொழி ஆக்கப்படக்கூடாது" —என்று, சர் சி. பி. இராமசாமி அய்யர் அவர்கள் சட்டக்குழுமுன் சாட்சியமளிக்கையில் கருத்தறிவித்திருக்கிறார்.

சர்க்கார் ஊழியர்கள் பிரச்சினைக்கு!

சர்வகட்சி மாநாடு கூட்டி முடிவு காண வேண்டும்

அண்ணு கூறும் அரிய யோசனை

சர்க்கார் ஊழியர் மாநாட்டில் கலந்துகொண்ட அண்ணு அவர்கள், ஊழியர்களது நெடுநாளையப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடுவதற்கு அரியதொரு யோசனையைக் கூறியிருக்கிறார்கள்; புதியதொரு பாதையைக் காட்டியிருக்கிறார்கள்.

"சர்க்கார் ஊழியர்கள், அதிருப்தி நிலையில் இருக்கலாகாது; அவர்கள் திருப்தியுடனிருந்தால்தான், நிர்வாகம் ஒழுங்குற நடைபெற முடியும். எனவே, சர்க்கார் ஊழியர்களின ஊதியத்தை உயர்த்துவது பற்றிய நெடுநாளையப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேட எல்லா அரசியல் கட்சிகளினுடையவும் பிரதிநிதிகளும் ஊழியர்களின் பிரதிநிதிகளும் கொண்ட ஒரு மாநாடு கூட்டவேண்டும். அதில் பிரச்சினையைத் தீர்க்கமாக விவாதித்து, ஒரு உரிய வழி காண வேண்டும்" என்று, அண்ணு அவர்கள் யோசனை கூறியிருக்கிறார்கள்.

****

நாளை!

இன்று (28—1—57) வெளியிடுவதாயிருந்த அபேட்சகர்கள் மூன்றும் பட்டியல் நாளை 29-1-57 (வெளியீடு 30—1—57) அன்று 'நம்நாடு' இதழில் வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க)

****

வேலைநிறுத்தம் பற்றி வாக்கெடுப்பு நடத்துவர்

சர்க்கார் ஊழியர் மாநாட்டு முடிவுகள்

அழைப்பை ஏற்று அண்ணு கலந்துகொண்டார்

மதுரை, ஜன, 27—

மத்திய சர்க்கார் ஊழியர்களின் சம்பள-பிரக்கிப்படி விகிதங்களின் அளவுக்கு சென்னை சர்க்கார் ஊழியர்களின் விகிதங்களை மாற்றியமைக்காவிட்டால், வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது பற்றி ஊழியர்களிடை வாக்கெடுப்பு நடத்துவது என்று இங்கு நடைபெற்ற சென்னை சர்க்கார் ஊழியர் சங்க 35-வது மாநாட்டில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது

சங்கத்தைத் தொழிற்சங்க சட்டத்தின்கீழ் பதிவு செய்வதற்கு வழி செய்யும் வகையில் புதியதொரு சட்டத்தொகுப்பை வகுக்க மூன்று பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் நிறுவப்பட்டிருக்கிறது.

மாநாட்டில் மாநில சங்க நிர்வாகிகளின் இராஜினமா ஒருமனதாக ஏற்கப்பட்டதுடன், துணைத் தலைவரான கோவிந்தசாமிசெட்டியார் அவர்களே தொடர்ந்து சங்கத்தின் முழுப் பொறுப்புகளையும் வகித்துவருவதென்ற முடிவாகியிருக்கிறது.

மாநாட்டில் தி. மு. கழகத் தலைவர் அண்ணு அவர்களும், கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் பி. ராமமூர்த்தி அவர்களும் கலந்துகொண்டு பேசினர்.

மற்றும் வி. சங்கரன் என்ற வழக்கறிஞர், எஸ். பாலசுப்பிரமணியம் என்ற மக்கள்சபை உறுப்பினர் ஆகியோரும் மாநாட்டில் பேசினர்.

தென்னுட்டு மாநில சர்க்கார் ஊழியர் பெடரேஷன் ஒன்று அமைப்பதற்காகப் பலர் கொண்ட 'அட் ஹாக்' கமிட்டி ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது.

மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவரான ஆழ்வாரப்பன் அவர்கள் சர்க்கார் ஊழியர்களின் கோரிக்கைகளை விரிவாக எடுத்துரைத்தார்.

மாநாட்டிற்குத் தலைமை தாங்க இருந்த மந்திரி சி. சுப்பிரமணியம் வராததால், திரு. சங்கரராமனுசம் அவர்கள் மாநாட்டிற்குத் தலைமை தாங்கி, ஊழியர் சங்கக் கோரிக்கைகளை விளக்கி வலியுறுத்திப் பேசியிருக்கிறார்.

ம.பொ.சி.-யின் அரசியல்!

தமிழரசுக் கழக மாநில மாநாட்டில் விளக்கம்

சேலம், சன. 27—

"சில மாநிலங்களாவது காங்கிரசுக்கு எதிராக ஓட்டளித்தாலொழிய மாநிலங்களின் மீது மத்திய சர்க்கார் ஆதிக்கம் நீடிக்கத்தான் செய்யும்! "மாகாண சுய ஆட்சி உண்மையானதாயிருக்க வேண்டுமானுல், மத்திய சர்க்காரிலேயே எல்லா அதிகாரங்களும் குவிந்திருக்கக் கூடாது மாநிலங்களின் அதிகாரங்கள் போக மீதமுள்ளவைதான், மத்திய சர்க்காருக்கு இருக்க வேண்டும்,"

என்று, தமிழரசுக் கழகத் தலைவர் திரு ம. பொ. சிவஞானம் அவர்கள், மூவாயிரம் பேர் கலந்துகொண்ட தமிழரசுக் கழக மூன்றுவது மாநில மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டதாகத் தெரியவருகிறது.

யாருக்கு ஆதரவு?

தேர்தலில் தமிழரசுக் கழகம் ஈடுபடாது என்றும், ஆனுல் எவரும் சுயேச்சையாக நிற்பதை கட்சி கட்டுப்படுத்தாது என்றும் ம. பொ. சி. கூறியதுடன், தமிழரசுக் கழகத்தவர், தி. மு. கழகத்தினரைத் தவிர வேறு கட்சியினரில் தகுதியும் திறமையும் படைத்தவர்களுக்கே வாக்களிக்க வேண்டும் என்றும் கூறினுராம்!

தி. மு. கழகம்

"தேசிய விரோதமான கொள்கைகளையும், ஆரிய - திராவிட வித்தியாசங்களையும் பிரச்சாரம் செய்துகொண்டிருக்கும்வரையில், தி. மு. கழகம் நமது கட்சியின் ஆதரவு பெறத் தகுதியுள்ளதல்ல" என்றும் ம. பொ. சி. அவர்கள் கூறினுராம்!

எச்சரிக்கை(!)

தி. மு. கழகத்தினருக்கு மக்கள் ஓட்டளிக்கக்கூடாது என்றும எச்சரிக்கை விடுத்தாராம் அவர்!

தி. மு. கழக அபேட்சகர்கள்

அபேட்சை பத்திரம் தாக்கல் செய்தனர்

சென்னை, சன. 28—

தி. மு. க. துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் சென்னை—பேசின் பிரிட்ஜ் தொகுதிக்கு தனது அபேட்சையை இன்று பிற்பகல், நகரசபை கமிஷனர்முன் தாக்கல் செய்துள்ளார்.

தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள், சென்னை-ஆயிரம் விளக்குத் தொகுதிக்கான தனது அபேட்சையை இன்று தாக்கல் செய்துள்ளார்.

தோழர் க. அன்பழகன் அவர்கள், சென்னை—எழும்பூர் தொகுதிக்கான தனது அபேட்சையை நேற்று முன்தினம் தாக்கல் செய்துள்ளார்.

தோழர் என். சீவரத்தினம் அவர்கள் சென்னை-வண்ணுரப்பேட்டைதொகுதிக்கான தமது அபேட்சையை இன்று தாக்கல் செய்துள்ளார்.

தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள், சென்னை—பெரம்பூர் தனி தொகுதிக்கான தனது அபேட்சையை தாக்கல் செய்துள்ளார்.

தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் அதிராமபட்டினம தொகுதிக்காக தனது அபேட்சையை பட்டுக்கோட்டையில் தாக்கல் செய்துள்ளார்.

தோழர் சி. பஞ்சாட்சரம் அவர்கள், உத்திரமேரூர் தொகுதிக்கு, தனது அபேட்சையை தாக்கல் செய்தார்.

இரா. செழியன் அவர்கள் கரூர் மக்கள் சபைத் தொகுதிக்கு நேற்று முன்தினம தனது அபேட்சாபத்திரத்தைத் தாக்கல் செய்துள்ளார்.

****

தி. மு. க.—தேர்தல் பிரச்சார சிறப்பு மாநாடு

சென்னையில்

பிப்ரவரி 10-ந்தேதி ஞாயிறன்று

நடைபெறும்

★

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள் தலைமை தாங்குவர்.

★

- ★ நாட்டுக்கு நல்லாட்சி
- ★ சர்வாதிகாரத்தின் எதிர்காலம்
- ★ காங்கிரஸ் ஆட்சியின் ஊழல்கள்
- ★ தி. மு. கழகமும் பொதுமக்களும்
- ★ தேர்தல் பிரச்சார முறைகளும் தன்மையும்

என்பதைப்பற்றி

அண்ணு

என். வி. நடராசன்	ஈ. வெ. கி. சம்பத்
மு. கருணுநிதி	சி. பி. சிற்றரசு
கே. ஏ. மதியழகன்	சத்தியவாணிமுத்து
க. அன்பழகன்	காஞ்சி—கல்யாணசுந்தரம்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி	

ஆகியோரின் விளக்க உரைகள்

இரவு 10-மணிக்கு--நாடகம் உண்டு

இடமும், மற்ற விவரங்களும் அடுத்து அறிவிக்கப்படும்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

****

தெரிந்துகொள்ளுங்கள்

1954-ம ஆண்டில் இந்தியாவில் மொத்தம் ரூ. 102 கோடி மதிப்புள்ள கனிவகைகள் உற்பத்தி செய்யப்பட்டன.

பொதுத் தேர்தல்

பெண்களுக்குத் தனி வாக்குப் பதிவுச் சாவடிகள் இருக்கும்

பொதுத் தேர்தலின்போது பெண்கள் வாக்குப் பதிவு செய்ய தனி ஓட்டுச் சாவடிகள் இருக்குமாம்; கூடுமானவரையில் பெண் அதிகாரிகளே அமர்த்தப்படுவார்களாம்.

'பெண்கள் வாக்குப் பதிவு செய்யும்போது அழியாத மையினுல் கையில் புள்ளியிடும் பணிக்கு பெண்கள் மட்டுமே நியமிக்கப்படுவார்கள்; அந்த வேலைக்கு நிச்சயமாக ஆண்கள் அமர்த்தப்படமாட்டார்கள்' என்று சென்னை தேர்தல் அதிகாரி பாலசுந்தரம் உறுதி கூறியிருக்கிறார்.

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 28—1—'57 திங்கள்

முடியாது---முக்காலும் முடியாது!

வடநாட்டை வளமாக்குவதற்குரிய பெரும் பெரும் தொழில் திட்டங்கள் பலவற்றை முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் துவங்கி இருக்கிறது இந்தியப் பேரரசு. அத்திட்டங்களில் சில வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு இயங்கியும் வருகின்றன மேலும் சில, முடிந்து உற்பத்தியைத் துவக்கும் தருவாயில் உள்ளன. வேறு சில, இரண்டொரு ஆண்டுக் காலத்திற்குள்ளாக உற்பத்தியில் ஈடுபடக்கூடிய தன்மையில் வெகு வேகமாக உருவாகி வருகின்றன.

வடநாட்டைத் தொழில் மயமாக்குவதில் காட்டப்பட்ட அக்கரை அளவு, தென்னாட்டின் தொழில் வளத்திற்குக் காட்டப்படவில்லை என்ற உண்மை, முதல் ஐந்தாண்டுத் திட்ட உள்ளடக்க ஏற்பாடுகளின் மூலம் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. அவ்வுண்மை மறைக்கக்கூடிய அளவில் அமைந்தில்லாததால், காங்கிரசுக் கட்சியின் முக்கியத் தலைவர்கள் எனக் கருதப்படுகிறவர்கள் கூட, அதை வேண்டாவெறுப்பாக ஒப்புக்கொண்டு, தொழில்துறையில் தென்னாடு முதல் திட்டத்தில் அலட்சியப்படுத்தப்பட்டிருக்கிறது என்று, வெளிப்படையாக எழுதியும் பேசியும் வந்துள்ளனர்.

இந்த ஓரவஞ்சனை குறித்து, மற்ற கட்சித் தலைவர்களைப் போலவே தனி நபர்களும் சுட்டிக்காட்டி இடித்துக் கூறினவற்றிற்கு மதிப்பளித்துத் தவறைத் திருத்திக்கொள்ள முன்வராதது போன்றே, காங்கிரசுத் தலைவர்களின் பணிவான முறையீட்டிற்கும் மதிப்பளித்து நடந்துகொள்ளவும் இந்தியப் பேரரசு முன்வரவில்லை. மற்றவர்கள் வேண்டுகோளை அலட்சியப்படுத்தி ஒதுக்கித் தள்ளிவிட்டது போன்றே, காங்கிரசுத் தலைவர்களின் கோரிக்கையையும் அலட்சியப்படுத்திப் புறக்கணித்துவிட்டது இந்தியப் பேரரசு.

முதல் திட்டத்தில் வடநாட்டிற்குத் தொழில் வசதிகளும் தென்னாட்டிற்கு அலட்சியமும் காட்டிய இந்தியப் பேரரசு, இரண்டாவது திட்டத்திலாவது தென்னாட்டிற்கு, அதற்குரிய முக்கியத்துவம் காட்டும் என்று எதிர்பார்த்தனர் காங்கிரசுத் தலைவர்கள் எனப்படுவோர். அந்த நம்பிக்கையின்மீதோ அல்லது அந்த நம்பிக்கை தமக்கிருப்பதாகப் பிறர் நம்பவேண்டும் என்பதற்காகவோ, சென்னை சட்டசபையில் இதுபற்றி இந்தியப் பேரரசை வற்புறுத்தும் ஒரு தீர்மானத்தையும் தாமே முன்னின்று ஒருமனதாக நிறைவேற்றிவைத்தார் நிதி அமைச்சர். அப்பொழுது மற்ற உறுப்பினர்களைவிட, குறிப்பிடத்தகுந்த பல காங்கிரசு சட்டசபை உறுப்பினர்கள், இந்தியப் பேரரசின் ஓரவஞ்சனைப் போக்கை தெளிவுபட எடுத்துக் காட்டிப் பேசியுள்ளனர். எதிர்க் கட்சியில் சிலரும் அதே போக்கில் அழுத்தம் திருத்தமாகப் பேசினர்.

தீர்மானம் மட்டும் நிறைவேறிவிட்டால் போதும், டில்லியை நடுக்கங் கொள்ளச் செய்வேன்—பணிந்து கொடுக்கச் செய்வேன்—மற்ற விஷயங்களில் டில்லிக்குக் குனிந்து கொடுத்ததுபோல் இவ்வகையில் துவண்டுவிடமாட்டேன் என்றெல்லாம் விராடபுத்திர வீர ஒத்திகை நடத்திக்காட்டினார், சட்டசபையில் அரசாங்கச் சார்பில் மேற்படி தீர்மானத்தை முன்மொழிந்துவைத்த நிதி அமைச்சர்! அவர் அன்று காட்டிய வாய்வீரம், வெறும் அரசியல் கண்கட்டு வித்தை என்பதை, டில்லிக்கு பின்னர் அவர் கூறிவரும் பராக்கு அம்பலமாக்கிக்கொண்டு இருக்கிறது.

முதல் திட்டத்தில்தான் தென்னாட்டைத் தொழில்துறையில் அலட்சியப்படுத்தி விட்டது; இரண்டாவது திட்டத்திலாவது, தென்னாட்டிற்குத் தேவைப்படும் தொழில்களைத் துவக்க ஏற்பாடு செய்ய இந்தியப் பேரரசு முன்வரக்கூடும் என்ற நினைப்பு—நம்பிக்கை தூயமனம் படைத்த காங்கிரசு ஊழியர்களுக்கு இருக்கத்தான் இருந்திருக்கும். ஆனால் அவர்களையும், இலவு காத்தக் கிளி போல் ஏமாற்றமடையச் செய்துவிட்டது, இரண்டாவது திட்டத்தின் மூலம் இந்தியப் பேரரசு.

இரண்டு திட்டத்திலும் தொழில்துறையில் தென்னாட்டிற்குரிய நியாயமான பங்கை அளிப்பதில் இந்தியப் பேரரசு தவறிவிட்டிருக்கிறது என்ற மகத்தான உண்மையை எவராலும் மறுக்க முடியாது. அந்தத் தவறுக்கு எது காரணமாக இருந்த போதிலும், இரண்டு திட்டத்திலும் தொழில் துறையில் தனக்குரித்தான—நியாயமான விகிதாசாரத்தைப் பெற முடியாமல், தென்னாடு தொழில் வளத்தில் தேக்கம் அடைந்து கிடக்கிறது என்பது பிரத்தியட்ச உண்மையாகும். இவ்வுண்மையை, அனைத்துலகக் கண்ணோட்டத்தின் மூலம் பார்த்தபோதிலும், மறைத்துப் பேசுவதற்கு இயலவே இயலாது.

வடநாட்டில் புதிய புதியத் தொழில்கள் தூவங்கப்படுகிறது என்றால், வேலையற்றோர் தொகை குறைக்கப்படுகிறது என்று பொருள்; பலர் வேலை பெறுகிறார்கள் என்றால், மக்களின் வாங்கும் சக்தி கூடுகிறது என்று பொருள். வாங்கும் சக்தி மக்களிடை பரவலாகிக் கூடுகிறது என்றால், மேலும் உற்பத்திப் பெருக்கத்திற்கும் புதிய தொழில்கள் துவக்கத்திற்கும் வாய்ப்பு உருவாகிறது என்று பொருள்.

தொழில் பெருக்கம் வேலையற்றுக் கிடப்போருக்கு வேலை தரும் வாய்ப்பளிக்கும்; வருமானத்தை உயர்த்தும். வருவாய் உயர்வு, வாழ்க்கையை வளமுடையதாக்கும். வாழ்க்கை வளம் பெறுவதின் உள்ளடக்கந்தான், தொத்து நோய், கல்லாமை, வறுமை, இளமரணம ஆகிய துன்பங்களிலிருந்து மக்கள் உடல் நலத்துடனும் உளப்பண்புடனும் ஒளிவிட உயிர்வாழ்வது என்பதாகும்.

எனவே, டில்லியிலே எலும்புருக்கி நோய், நாகபுரியிலே வெப்பநோய், அலகாபாத்திலே விஷபேதி எனப் பேசி வருவதின் மூலம், முதல் திட்டத்திலும் இரண்டாம் திட்டத்திலும், தென்னாட்டு மக்கள் மீது வலுக்கட்டாயமாக இந்தியப் பேரரசால் திணிக்கப்பட்டிருக்கும் தொழில் தேக்கத்தை, இல்லாமை இடர்பாட்டை, வறுமைக் கொடுமையை, பஞ்சம் பட்டினிச் சாவை மறைத்துவிட எந்த அரசியல் எத்தர்களாலும்—அவர்கள் வண்டி வண்டியாகப் பொருளாதார நூற்களைக் கற்றிருப்பதாகக் கர்வம் கொண்டிருந்த போதிலும் முடியாது—முக்காலும் முடியாது.

உயிர்குடித்த ஆட்சியாளர் அலட்சியப்போக்கு

மகனை இழந்த தந்தைக்கு தி. மு. கழக உதவி

லால்குடி கூட்டத்தில் அண்ணா ஆயிரம் ரூபாய் வழங்கினர்

நடராசனின் வீரமும் தியாகமும் நமது போற்றுதலுக்குரியன

லால்குடி, சன. 25—

"மாவீரன் நடராசன் மறைவு, நம்மால் என்றும் மறக்க முடியாதது! ஆட்சியாளர்தம் காட்டுத் தர்பாருக்கு—துப்பாக்கிப் பிரயோகத்திற்குப் பலியான அந்த வீரனின் நாமத்தை நாம் என்றும் மறவோம்! என்றென்றைக்கும் அவனது வீரத்தைப் போற்றுவோம்! தியாகத்திற்குத் தலை வணங்குவோம்!"

என்று அண்ணா அவர்கள் இங்கு 21—1—57 அன்று சிவன் கோயில் முன்பு நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"இதுபோல், நடராசன்களை களத்திலே பலி கொடுத்துவிடும் பெற்றோருக்கும் உற்றாருக்கும் நாம் என்றென்றைக்கும் கடமைப்பட்டிருக்கிறோம். நாம் இப்போது நடராசன் அவர்களது இழப்பால் வாடும் பெற்றோர்களுக்கு ஏதேதோ, எவ்வளவோ செய்யவேண்டுமென அவாவுறுகிறோம். ஆனால் நமது வசதிகளும் சூழ்நிலைகளும் நம் கைகளைக் கட்டிவிடுகின்றன. இந்த நிலையில், ஆட்சியாளர்கள் தாங்கள் விளைவித்த கொடுமைக்கு, தகுந்த நஷ்ட ஈடு தரவேண்டும்; ஆனால், இப்போது ஆட்சிபீடத்திலிருப்போர், அந்த நல்லெண்ணமும் நேர்மையும் கொண்டவர்களாக இல்லை. நாம்தான் நம்மால் ஆனவரை ஏதோ செய்துவருகிறோம். இதனைச் செய்வதில் தி. மு. கழகம் என்றுமே தயக்கம் காட்டியதில்லை.

"இன்று, கல்லக்குடி அறப்போரில் உயிர்நீத்த வீரன் நடராசனின் குடும்பத்தாருக்கு தி. மு. க. தலைமை நிலையத்தின் சார்பில் ரூ. 1,000 மட்டும் அளிக்கிறேன்" என்று கூறி, தொகையை நடராசனின் தந்தையாரிடம், கண்களில் நீர் மல்க வழங்கினார்கள்.

கூட்டத்திற்கு தோழர் ஏ. பி. தர்மலிங்கம் தலைமை தாங்கினார்.

(ச. - தி)

'பல்கலைக் கழகங்கள் காலமாறுதலுக்கு ஒப்ப நடந்து கொள்ள வேண்டும்'

'பழைய காலப் பரீட்சை முறைகள் ஒழிக்கப்பட வேண்டும்'

திட்டக் குழு உறுப்பினர் கருத்து

"தீவிர மாறுதல்கள் ஏற்படும் காலத்தில் பல்கலைக் கழகங்களும் பழைய நிலையில் தேங்கியிருக்க முடியாது. பழைய விதி முறைகளையும் பாடத் திட்டங்களையும் கைக்கொள்வதைக் குறைத்துக்கொண்டு, புதுவுலகப் புதுமைகளுக்கேற்றபடி நாம் புதுமை அறிவொளியுடன் நடந்துகொண்டு புதிய முறைகளைக் கைக்கொண்டால், பொதுமக்கள் மனக்குறையை நீக்கி திருப்தியளிக்க முடியும்.

'பழைமைப் பாசிபடிந்த மனப் போக்கினர் படிப்பு நிர்வாக அதிகாரத்தைப் பெற முற்பட்டதுமுதல், பல்கலைக் கழகங்களும் நலியத் தொடங்கின. இந்த ஆபத்து தவிர்க்கப்பட வேண்டும்"

என்று, திட்டக்குழு உறுப்பினரான டாக்டர் ஜே. சி. கோஷ், கல்கத்தா பல்கலைக் கழக நூற்றாண்டு விழாவையொட்டி நடைபெற்ற 'கருத்து அரங்கில்,' 'இந்தியாவில் பல்கலைக் கழகப் படிப்பின் எதிர்காலம்' என்ற தலைப்பில பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

"அயல்நாட்டுப் பரீட்சை முறையால் காலமும் பணமும்தான் வீண்விரயமாகின்றன. இந்தப் பரீட்சைகள் ஒவ்வொன்றிலும் மாணவர்களில் பாதி விகிதத்திற்கு மேற்பட்டவர்கள் ஒவ்வொரு தடவையும் தோல்வியுறுகின்றனர். இவ்விதம் மாணவர்கள் தோல்வியுறும் விஷயத்தில அதிகாரபீடத்திலுள்ளவர்கள் காட்டிவரும் மனப்பான்மையும், தெரிவிக்கும் கருத்தும வருந்தத்தக்கவையாயிருக்கிறது

"வெற்றுநாட்டு சர்க்கார் ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் ஏற்படுத்தியதும், குறுகியகால நினைப்புச் சக்தியை சோதனை செய்வதற்கான வெறு இயந்திரப் போக்கு முறையாக இப்போது ஆகிவிட்டதுமான இந்தப் பரீட்சை முறையால் ஏற்படும் பலன் மாணவர்களுக்கு ஏமாற்றமும் மன ஒடிவும், பண விரயமுமதான்; இவற்றின் விளைவாக சமுதாயத்துக்கே கேடு விளைவிக்கும மனப்போக்கு அவர்களிடை ஏற்பட வழிகோலப்படுகிறது.

"இந்தப் பரீட்சைகளில், நல்ல பண நிலைமையிலுள்ள சில ஆயிரம் மாணவர்கள் பாதகம் அடைந்திருந்தால், இந்தப் பரீட்சை முறை அவ்வளவாகக் கவனத்தைக் கவர்ந்திருக்காது; ஆனால் இந்த விளைவுகளுக்கு ஆளானோர்களோ இலட்சக்கணக்கில உள்ளனர். எனவே, இப்பிரச்சினையைத் தாமதமின்றி தீர்த்துவைக்கவேண்டியிருக்கிறது"

கோவில்களின் நிர்வாகம்

'பூர்விகத் தானங்களால் நடைபெறக்கூடாது'

விநோபா பாவே கருத்து

தஞ்சை, சன. 24—

'கோயில் பாதுகாப்பு, தற்கால மக்களின் பக்தியின் விளைவாக அவர்கள் கொடுக்கும் பணத்தைக் கொண்டு இருக்க வேண்டுமேயன்றி, முன்னோர்கள் விட்டுச் சென்ற சொத்துக்களைக்கொண்டு நிர்வகிப்பதாக இருக்கக்கூடாது" என்று விநோபா பாவே கூறியுள்ளார்.

சென்னை அரசாங்கத்திற்கு நகரசபை கோரிக்கை

சென்னை, சன. 24—

சென்னை நகரசபைக்குச் சொந்தமான வீடுகளைத் திருத்தி அமைக்கவும், பழுதுபார்க்கவும் ரூ. 1 இலட்சம் கடன் உதவியளிக்க வேண்டும் என்று அரசாங்கத்தை சென்னை நகரசபை கேட்டுக் கொண்டுள்ளது.

மலேயா தமிழர்கள் முன்னேற்றம்

கி. ஆ. பெ. விசுவநாதம் மதிப்பீடு

கோலாலம்பூர், ஜன. 25—

"இந்தியாவைப் போலல்லாமல் மலேயாவிலுள்ள தமிழர்களெல்லாம் சாதிப் பாகுபாட்டை அடியோடு ஒழித்துவிட்டார்கள். இப்படி, சாதிப் பாகுபாடு என்ற குறுகிய மனப்பான்மையை விட்டொழித்த இங்குள்ள தமிழர்களின் இச்செயல் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்."

இவ்வாறு, இங்குள்ள நகர் மண்டபத்தில் நடைபெற்ற தமிழர் நாள் விழாவின்போது உரையாற்றுகையில் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்.

மூட்டைப் பூச்சிகளை ஒழிக்க புதிய வார்னிஷ்!

புதுடில்லி, சன. 24—

இலட்சுமணபுரியில் உள்ள இரயில்வே ஆராய்ச்சி நிலையத்தார் மூட்டைப்பூச்சி ஒழிப்புக்குப் புதிதாக இரசாயன வார்னிஷ் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனராம்.

டி. டி. டி.-யையும் மற்றொரு மருந்தையும் சேர்த்து இந்த வார்னிஷ் தயாரிக்கப்பட்டிருக்கிறதாம்.

நாடெங்கிலும் பொங்கல் நாள் விழா

இவ்வாண்டுப் பொங்கல் விழாவினை நாடெங்கிலுமுள்ள தி. மு. கழகக் கிளைகளும், கழகச் சார்புடைய மன்றங்கள், படிப்பகங்களும் சிறப்புறக் கொண்டாடியுள்ளன. சார்பு மன்றங்கள், படிப்பகங்கள் சார்பில் நடைபெற்ற விழாச் செய்திகளின் ஒரு பகுதி முன்னர் வெளியிடப்பட்டது. மேற்கொண்டும் சில செய்திகள் சுருக்கிக் கீழே தரப்பட்டிருக்கின்றன :—

மதுரை :

18—1—57-ல், மதுரை வடக்கு மாசவீதி மறுமலர்ச்சிக் கழகத்தைச் சார்ந்த சப்பாணி கோயில் சந்து தி. மு. கழகத் தோழர்களால், தோழர் சி. கோவிந்தராசன் தலைமையில் விழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எஸ் முத்து எம்.சி, சந்தானம், சுந்தரராசன் ஆகியோர் பேசினர். தோழர்களுக்குக் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன், வடக்காவணி மூலவீதி இளைஞர்கள் சார்பில், தி மு கழகத் தேர்தல் நிதிக்கு 36 காலணாக்கள் கொண்ட பணமுடிப்பு அளிக்கப்பட்டது.

* * *

14—1—57-ல், நாயக்கர் புதுத் தெரு இளைஞர்கள் சார்பில், தோழர் கதி. சுந்தரம் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது தோழர்கள் கி. மனோகரன், உலகநாதன் சொக்கலிங்கம் ஆகியோர் விழா குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

இரங்கனுதம்பேட்டை :

16—1—57 இரவு, கலையரங்கில், அறிஞர் நூல்நிலையச் சார்பில் தோழர் எம. குழந்தைவேல் தலைமையில் 'தியாகச்சுடர்' நாடகம் நடைபெற்றது தோழர் முத்துசாமி, எஸ் பழனிசாமி ஆகியோர் பேசினர்.

பெரியகுப்பம் :

14—1—57 மாலை 6 மணிக்கு, திருவள்ளூர் பெரியகுப்பம் பகுத்தறிவு மனற இரண்டாவது ஆண்டு விழா, பொங்கல் விழா தோழர் எஸ். பக்தவத்சலு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வ. கோவிந்தசாமி, எச். எத்திராசன், எம். கல்யாணசுந்தரம் ஏ. பி. சாமி, டி பி. பாலன், பி. நாராயணன், டி. ஆர். வரதன் ஆகியோர் பேசினர்.

திண்டுக்கல் :

15—1—57-ல், திண்டுக்கல் செளந்திரபாண்டியனர் நினைவு மன்றச் சார்பில், தோழர் இரா. ஜெனார்த்தனம் தலைமையில் இசை முரசு நாகூர் அனீபா அவர்களின் இசை விருந்து நடைபெற்றது தலைவருக்கும் தோழர் அனீபாவுக்கும் பல கிளைக் கழகங்கள் சார்பில் மலர்மாலைகள், கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

தூத்துக்குடி

14—1—57ல், தூத்துக்குடி மீ. சா. தெருவில், தி. மு. கழக மாணவத் தோழர்கள் சார்பில் விழா கொண்டாடப்பட்டது தோழர் பி. வி ஆர். பாண்டியன் கொடியேற்றுவித்தார். கொடிக்கம்பத்தில் தோழர் கே. வி. கே சாமியின் உருவப்படம் வைக்கப் பட்டிருந்தது. பின்னர் ஊர்வலமும், அழகிரி திடலில் விழாக் கூட்டமும் நடைபெற்றது

இடையர்பாளையம்

14—1—57 காலை 10 மணிக்கு பகுத்தறிவு மன்றச் சார்பில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர் கு. கி. நெடுங்கிள்ளி கழகக் கொடியேற்றினர். பகலில் பல விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. மாலை, தோழர் எஸ் எம். உஸ்மான் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், தோழர்கள் க. ஜெனார்த்தனம், கு. ப. சேகநாதன், தங்கமாணிக்கம், மு. இராமநாதன் ஆகியோர் பேசினர்.

புலியகுளம்

15—1—57 அன்று புலியகுளம் அழகிரி மன்றச் சார்பில் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாலை, மதீன உடற்பயிற்சிக் கழகத்தினரின் உடற்பயிற்சி விளையாட்டுக்கள் நடைபெற்றன பின்னர், தோழர் அ. பழனிசாமி கழகக் கொடியேற்றினர். தோழர்கள் கி ஆ குப்புராசு, கீ. வரதராசு பேசினர் இரவு, வண்டியில் அண்ணா மற்றும் தலைவர்கள் படங்களுடன் பொங்கல் எடுத்துச் சென்று ஊர்வலம் நடைபெற்று, ஏராளமான மக்களுக்குப் பொங்கல் வழங்கப்பட்டது.

ஏனுதி

16—1—57 மாலை 6 மணிக்கு பன்னீர்செல்வம் நூலகச் சார்பில் தோழர் ப. சி. இரங்கசாமி தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் க. மீ. முகமது உசேன், சே. வேந்தன், மாணிக்கம், அ. மா சிவானந்தம், வடிவேல் வி. அருணாசலம், முக. மீரா ஆகியோர் பேசினர். தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு, சிறுவர்கள் சார்பில் 101 காலணா பண முடிப்பு கொடுக்கப்பட்டது.

கொப்பம்பட்டி

16—1—57 அன்று நெடுஞ்செழியன் படிப்பகச் சார்பில் விழா ஊர்வலம் நடைபெற்றது தேர் நிறுத்தத் திடலில், தோழர் செ. வைத்திலிங்கம் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது தோழர்கள் சு. நெடுமாறன், முத்துக்கருப்பன், கை. ஆறுமுகம், டி கே. பெரியசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தச்சநல்லூர்

14—1—57ல், புதுமைப் படிப்பகச் சார்பில் விழா கொண்டாடப்பட்டது இரவு 7 மணிக்கு, வ. உ. சி மைதானத்தில் திரு. ஓ வி. கணபதி தலைமையில் இயல், இசை விருந்துகள் நடைபெற்றன. தோழர்கள் இராசன், மணிவேங்கடம், டி. எஸ். சுந்தரம் ஆகியோர் பேசினர். தோழர் அரிஅரன் இசைவிருந்து அரங்கேற்றம் செய்யப்பட்டது. தோழர்கள் கண்டசாலா, நமசிவாயம் ஆகியோர் இசைவிருந்தளித்தனர். இறுதியில் சுகுணா சகோதரிகளின் நடன நிகழ்ச்சியும் நடைபெற்றது.

புதூர் உத்தமனூர் :

17—1—57 இரவு 7 மணிக்கு, புதூர் உத்தமனூரில் தோழர் சாமிநாதன் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில், டாக்டர் மா. இராசமாணிக்கனார், அரங்கசாமி த இராமமூர்த்தி, அ. பொன்னம்பலனர் ஆகியோர் தமிழர் விழா குறித்துப் பல தலைப்புகளில் பேசினர்.

மேலப்புதூர் :

14—1—57 மாலை 6 மணிக்கு, தி. மு கழகப் படிப்பகச் சார்பில், தோழர் சரவணன் தலைமையில் விழா சிறப்புற நடைபெற்றது. தோழர்கள் எஸ் நெடுமாறன், இளவன், அங்குதாசன் ஆகியோர் பேசினர். அண்ணா இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. இறுதியில் அனைவருக்கும் பொங்கல் வழங்கப்பெற்றது.

திருப்பரங்குன்றம் :

15—1—57 அன்று திராவிடர் பகுத்தறிவு மன்றச் சார்பில் விழா சிறப்புற நடைபெற்றது. ஊரின் பல பகுதிகளும் கழகக் கொடிகள், தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டன.

அரியலூர் :

16—1—57-ல், திராவிட இளைஞர் மன்றச் சார்பில் விழா சிறப்புறக் கொண்டாடப்பட்டது. காலை 9 மணிக்கு, தோழர் ஏ. நெடுமாறன் கொடியேற்றுவித்தார். மாலை 4 மணிக்கு, இளைஞர் மன்றக் கலை நிகழ்ச்சியும், பின்னர், தோழர் எம், மணி தலைமையில் விழாக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் நா. தமிழ்முத்து, கோ சிவப்பெருமான், கலியபெருமான், ஏ. நெடுமாறன் சி. இலக்குவனர், இராம. அரங்கநாதன் ஆகியோர் பேசினர். இறுதியில் இனிப்புகள் வழங்கப்பட்டன.

திண்டுக்கல் :

14-1-57 காலை 8 மணிக்கு, சோலைஹால் ரோடு, கே. வி. கே. சாமி நினைவுப் படிப்பகச் சார்பில், படிப்பகத்திற்குமுன், தோழர் வேலாயுதன் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கே. எஸ். சந்தானம், பி. சமதர்மம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். மாலை 6½ மணிக்கு இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

பிரான்மலை :

15-1-57-ல், அண்ணா மன்றச் சார்பில் காந்தி சதுக்கத்தில் தோழர் பழ. சொக்கலிங்கம் தலைமையில் விழாக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சே. சி. சாமி, நா. சுப்பையா சுப. குஞ்சிதபாதம், ஞா. கிருஷ்ணன், ஞா தியாக அரசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர். போட்டி விளையாட்டுகளில் வெற்றி பெற்றோருக்குத் தோழர் முத்துக்குமார் மாலையணிவித்துப் பரிசு வழங்கினர் இறுதியில் அனைவருக்கும் தின்பண்டங்கள் வழங்கப்பட்டன.

திருவப்பூர் :

16—1—57 பிற்பகல் 2 மணியளவில் தமிழ் மன்றச் சார்பில் சிறுருக்குப் பொங்கல் வழங்கப்பட்டது. பின்னர், மன்றக் கட்டிடத்தில் தோழர் வை. சண்முகம் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

பெங்களூர்—சிவாஜி நகர்

15—1—57ல், பெங்களூர் பினாக்பள்ளி தி. மு. கழகச் சார்பில் இயங்கும் சிவாஜி நகர் இளங்கோ இரவுப் பள்ளி சார்பில் பொங்கல்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பிற்பகல் மாணவர் அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. மாலை 6½ மணிக்கு தோழர் முசிறி புத்தன் தலைமையில் தோழியர் விசாலட்சுமி-சிவலிங்கம், தோழர் கி. சோழன் ஆகியோர் பேசினர். பள்ளி மாணவர்களின் கலைநிகழ்ச்சியும் நடைபெற்றது. 14-ந் தேதி தோழர் திராவிடமணி தலைமையில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றோருக்குத் தோழர் ஜெ எஸ் நாதன் பரிசு வழங்கினர்.

தெலுங்கப்பட்டி

14—1—57ல், வள்ளுவர் மன்றச் சார்பில் விழா கொண்டாடப்பட்டது. விழாவிற்குத் தோழர் முத்தையா தலைமை வகித்தார். தோழர் சின்னையா கொடியேற்றினர். தோழர்கள் காசிநாதம், பொன்னுசாமி, என். சக்கரபாணி, என். வடிவேலன் ஆகியோர் பேசினர். இரவு 10 மணிக்கு, வள்ளுவர் மன்றத்தினரால் 'மறுமலர்ச்சி' எனும் நாடகம் நடைபெற்றது.

சிதம்பரம்

14—1—57 மாலை 4 மணிக்கு, மெய்க்காவல் தெருவில் கே. வி கே. சாமி மன்றத் திறப்புவிழாவும், பொங்கல் விழாவும் தோழர் ந. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத் தலைவர், மன்றத்தையும், தோழர் ஆர். இராமலிங்கம் கே. வி. கே. சாமி படத்தையும் திறந்துவைத்தனர். தோழர்கள் பூபதி, மலர்மன்னன், வேலழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். அனைவருக்கும் கற்கண்டு வழங்கப்பட்டது.

வாணதரையன்குப்பம் :

16—1—57 காலை 9 மணிக்கு, வேலாயுதம் திடலில், தோழர் அ. மகாராயர் தலைமையில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. பின்னர், தோழர் அ. பொன்னையா தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில், தோழர்கள் அ. மகாராயர், ஆர். சிவநேசன், டி. அய்யாதுரை, எம். செல்வராசன், வி. பஞ்சநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. அனைவருக்கும் சர்க்கரை, சந்தனம் வழங்கப்பட்டது.

கரியாபட்டணம் :

14—1—57 அன்று பொங்கலடித் திடலில், திரு. சி. முருகேசனர் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் எம். இரங்கசாமி குழுவினரின் கலை நிகழ்ச்சியும், டெய்லி இன்வெஸ்ட்மெண்ட் போனஸ் கம்பெனியாரின் குத்துச் சண்டை விளையாட்டும் நடைபெற்றன. தோழர்கள் ந. தருமலிங்கம், அம்பிகாபதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். வ. உ சி மன்றச் சார்பில் 'பேராசை' தியாகராசன் குழுவினரின் 'அனர்கலி' நாடகங்களும் நடைபெற்றன நாடகத்தில் நடித்தத் தோழர்களுக்கு, அண்ணா அவர்கள் எழுதின நூற்கள் பரிசளிக்கப்பட்டன திரு. கே. எம். முத்து அவர்கள் பாராட்டுரை வழங்கினர்.

தூத்துக்குடி

14—1—57 இரவு 7 மணிக்கு மக்கள் மறுமலர்ச்சி மன்றச் சார்பில் விழாவையொட்டி சொற்பொழிவுப் போட்டி நடைபெற்றது. தோழர்கள் எஸ் காசி எஸ். கணபதி, ஏ. மோகன்ராஜ். இராமசாமி ஆகியோர் பேசினா. தோழர்கள் எஸ். கணபதி, எஸ் காசி ஆகிய இருவருக்கும் முறையே முதலாவது, இரண்டாவது பரிசுகளாகத் திருக்குறள் புத்தகங்கள் வழங்கப்பட்டன. இறுதியில் தோழர் எம். எஸ் சிவசாமி கருத்துரை வழங்கினர்.

கோவை

14—1—57 மாலை கே. வி. கே சாமி படிப்பகச் சார்பில் தோழர் வீ. பழனிசாமி தலைமையில் நடைபெற்ற விழாக்கூட்டத்தில் தோழர் எஸ். ஏ. இராசமாணிக்கம் சிறிதுநேரம் பேசினதும், தோழர் முகவை - ஆர். எஸ். பாண்டியன் கழகக் கொடியை ஏற்றிவைத்துப் பேசினர். பின்னர் திரு. மருதவாணனர் அவர்கள் விழா குறித்து விரிவுரையாற்றினர். இறுதியில் முத்து குழுவினரின் இசைவிருந்தும் நடைபெற்றது. அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

வேடசந்தூர்

14—1—57 அன்று தோழர் இர. மாசிலாமணி தலைமையில் தமிழர் படிப்பகச் சார்பில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இரவு 7 மணிக்கு தோழர் எஸ். பூலோகம் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் இரா. இராமலிங்கம், இரா. முத்துசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். போட்டிகளில் வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. 'தமிழகம் அன்றும் இன்றும்' எனும் தலைப்பில் நடைபெற்றக் கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற தோழர் இரா. முத்துசாமி முதல் பரிசு பெற்றார். விழாவிற்கு வருகை தந்த அனைவருக்கும் பொங்கல், கரும்பு வழங்கப்பெற்றன.

மாநிலச் சீரமைப்புக்குப்பின் இந்தியாவில் தொழில்துறை தகராறு

புள்ளி விவரக் கணக்கில் ஒரு கண்ணோட்டம்

புதுடில்லி, சன. 5—

மாநிலங்கள் சீரமைப்புக்குப்பின்னர், இந்தியாவின் தொழில்துறைத் தகராறுகள் பற்றிய விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன.

1956 நவம்பர் மாதத்தில் புதிதாக 77 தகராறுகள் ஏற்பட்டன; இவற்றில் மொத்தம் 27,862 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.

இதற்கு முந்திய மாதத்தில் புதிதாக 76 தகராறுகள் ஏற்பட்டன; இவற்றில் மொத்தம் 49,007 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.

இம்மாதத்தில் மொத்தம் 104 தகராறுகள் நீடித்துவந்தன; இவற்றில் மொத்தம் 46,000 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.

முந்திய மாதத்தில் நீடித்துவந்த 145 தகராறுகளில் மொத்தம் 1,12,000 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.

நடைமுறை மாதத்தில் ஏற்பட்ட 14 தகராறுகள் கதவடைப்புகள் காரணமாக ஏற்பட்டவையாகும்; இவற்றில் மொத்தம் 16,000 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.

இம்மாதத்தில் முடிவடைந்த 36 தகராறுகளில் தொழிலாளர்களுக்கு முழுவதுமோ அல்லது ஓரளவுக்கோ வெற்றி கிடைத்தது; 24 தகராறுகளில் அவர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை; 13 தகராறுகளில் முடிவுகள் நிச்சயமில்லாமலிருந்தன. 8 தகராறுகளில் முடிவுகள் தெரியவில்லை. இத்தகராறுகளில், கூலிகள், படிகள், சிப்பந்திகள் ஆகியவை முக்கியக் காரணங்களாக இருந்தன.

தேர்தல் வேலைக்குச் செல்லும் ஆசிரியருக்கு

'பிரயாணப்படி முன்பணமாக தரப்பட வேண்டும்!'

ஆட்சியாளருக்கு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் சங்க வேண்டுகோள்

நாமக்கல், சன. 25—

"வருகிற பொதுத் தேர்தலுக்குப் பணியாற்றச் செல்லும் ஆசிரியர்களுக்கு ஒரு வாரத்திற்கு முன் கூட்டியே பிரயாணப்படி முன்பணமாகக் கொடுக்கப்பட ஏற்பாடு செய்யவேண்டியது மிக அவசியம்."

கடந்த 1952ல் கடந்த பொதுத் தேர்தலிலும், பின்னர் நடைபெற்ற துணைத் தேர்தல்களிலும், தேர்தல் வேலைகளுக்குச் சென்ற ஆசிரியர்கள் சிலருக்கு இன்னமும் பிரயாணப்படி தரப்படாமலிருப்பதைச் சுட்டிக்காட்டி, சேலம் மாவட்ட ஆரம்பப் பள்ளி ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. வி. இராமசாமி அவர்கள், இத்தேர்தலிலும் அப்படி நடைபெறுவண்ணம் கவனித்துக் கொள்ளுமாறு மேற்கண்ட வேண்டுகோளினை ஆட்சியாளருக்கு விடுத்திருக்கிறார்.

மேலும் அவர், சர்க்கார் இதனை உடனே கவனித்து ஆவன செய்தாக வேண்டுமென்றும், இன்றேல், தேர்தல் வேலைக்குச் செல்லும் ஆசிரியர்கள் உற்சாகமின்றி இருப்பர் என்றும் வெளிப்படுத்தியிருப்பதுடன், தேர்தல் வேலைகளுக்குச் செல்லும் ஆசிரியர்களுக்குக்குறித்த நேரத்தில் பஸ் வசதி அளித்துச் சலுகை தருமாறும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

'நீபா' காகித ஆலையில்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், மொத்தம் 1 இலட்சம் டன் பத்திரிகைக் காகிதம் உற்பத்தி செய்ய திட்டக்குழு, இலட்சிய அளவு நிர்ணயித்துள்ளது. இதில் 30,000 டன் 'நீபா' காகித ஆலையில் உற்பத்தி செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வளவு அக்கரை?

இந்தியாவில் தற்போது ஏறக்குறைய 25,000 கிராமங்களில் சமுதாய ரேடியோ செட்டுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது திட்ட காலத்துக்குள்ளாக ஆயிரத்திற்குமேற்பட்ட மக்கள் தொகையுள்ள கிராமங்கள் எல்லாவற்றிற்கும் இந்த வசதியை விரிவாக்கஉத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

காமராசராட்சியில் மேலும் படுகொலை

வால்பாறை தோட்டத் தொழிலாளர் மீது துப்பாக்கிப்பிரயோகம்

3 பேர் பலி! பலருக்குக் காயம்!

கோவை, சன. 27—

ஆனைமலை—வால்பாறை தோட்டத் தொழிலாளர்மீது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து, மூன்று தொழிலாளர்களைக் கொன்று பலரைக் காயப்படுத்திக் கொடுமை புரிந்திருக்கின்றனர்.

ஊர்வலம்

தோட்டத் தொழிலாளருக்கான தொழில் நீதிமன்றம் தந்த தீர்ப்பை உடனடியாக அமுல் செய்யக்கோரி 10 000 தோட்டத் தொழிலாளர்கள், மாபெரும் ஊர்வலம் ஒன்று நடத்தினர்.

ஊர்வலம், பொதுக்கூட்டம் நடைபெறும் மைதானத்தை நெருங்கும்போது, கூட்ட அமைப்பாளரில் ஒருவர் போலீசாரால் தாக்கப்பட்டு போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டாராம்.

இதனை அறிந்த தொழிலாளர்கள், உடனே போலீஸ் நிலையம் சென்று, கைது செய்தவரை விடுவிக்கக்கோரி ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

இந்த நேரத்தில் சிலர், போலீஸ் நிலையத்தின்மீது கற்களை வீசியதாகவும் அதனால் பல போலீசார் காயப்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

'தற்காப்பிற்காக' என்று கூறி போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து, 3 தொழிலாளர்களை கொன்றிருக்கின்றனர்; பலரைக் குண்டுக் காயங்களுக்கு ஆளாக்கியிருக்கின்றனர்.

கூட்டத்தில் இந்தக் கொடுமையைக் கண்டித்து தீர்மானம் நிறைவேறியிருக்கிறது.

விசாரணை

கோவை—வால்பாறையில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் குறித்து உடனடியாக சர்க்கார் விசாரணை நடத்துமாம்.

'ரெவினியூபோர்டு' உறுப்பினர் விசாரணை நடத்துவாராம்.

போலீஸ் தலைமை அதிகாரியும் வால்பாறைக்குச் சென்று விசாரணை நடத்துவாராம்.

சர்க்கார் ஊழியர்களுக்கு 'கிராக்கிப்படி' உயர்வு

பெங்களூர், சன. 25—

மைசூர் மாநில சர்க்கார் ஊழியர்களில் மாதம் ஒன்றுக்கு ரூ. 80 வரை ஊதியம் பெறுவோருக்கு, நகரில் வாழ்பவர்களாக இருந்தால் ரூ 30-ம், வெளிப்புறப் பகுதிகளில் இருப்பவர்களுக்கு ரூ 25-ம், அதுபோலவே, ரூ. 80 முதல் ரூ 100 வரை சம்பளம் பெறும் ஊழியர்களில் நகரில் இருப்பவர்களுக்கு ரூ. 35-ம், வெளிப்புறப் பகுதிகளிலிருப்பவர்களுக்கு ரூ. 30-ம் கிராக்கிப்படி அளிப்பதென மைசூர் மாநில சர்க்கார் முடிவு செய்திருக்கிறது.

இந்த முடிவு, 1-1-57 முதல் அமுல் நடத்தப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

சென்னை பாங்கிஊழியர்கள் போராட்டம்

சென்னை, சன. 24—

1956-ம் ஆண்டுக்கு 4 மாத போனஸ் தரும்படி கோரி 'இந்தியன் ஓவர்சீஸ் பாங்கி' ஊழியர்கள் தங்கள் காரியாலயத்தின்முன் நேற்று காலை அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்தப் பாங்கிக்கு மொத்தம் ரூ 41-இலட்சம் இலாபம் கிடைத்துள்ளதாம்; ஆனால் ஊழியர்களுக்கு 2 மாத போனஸ் மட்டுமே அளிக்கப்பட்டுள்ளதாம்.

4 மாத போனஸ் கோரி இம்மாதம் 30-ந் தேதியை 'கண்டன நாளாக' எல்லாக் கிளைகளின் ஊழியர்களும் கொண்டாடுவார்கள் என்று சங்கம் அறிவித்துள்ளது.

அமெரிக்காவும் அணுகுண்டு பரிசோதனை செய்யுமாம்

நியூயார்க், சன 25—

அமெரிக்க சர்க்காரின் தற்காப்பு இலாகாவின் ஒத்துழைப்புடன் இவ்வாண்டு மே மாதத்தில் அணுகுண்டு பரிசோதனைகள் நடைபெறும் என்று அமெரிக்க அணுசக்திக் குழு அறிவித்திருக்கிறதாம்.

வ. ஆ. மாவட்ட தி. மு. கழகத் தோழர்களுக்கு:

★

"வட ஆற்காடு மாவட்ட தி. மு. கழக அலுவலகமும் மாவட்ட தி. மு. கழகத் தேர்தல் அலுவலகமும், வாணியம்பாடி நியூ டவுனிலுள்ள எண். 66 இல்லத்தில் நிறுவப்பட்டுள்ளது. கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் மேலே குறிப்பிட்டுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறேன். செயலாளருக்கு எழுதப்படும் அஞ்சல்களும் இம்முகவரிக்கே அனுப்புமாறும் கேட்டுக்கொள்கிறேன்"

என்று, வ. ஆ. மாவட்ட தி மு கழகச் செயலாளர் முல்லை - சக்தி அறிவிக்கிறார்.

சங்கு-கணேசன் உடல் நிலை மோசமாகி வருகிறது

12-வது நாளாக உண்ணாவிரதம் தொடருகிறது

ஆதரவாக மேலும் ஒருவர் போட்டியிடுகிறார்

சென்னை, சன. 28—

தாயகத்திற்கு தமிழ் நாடு என்று பெயரிடவேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளுக்காக சாகுமவரை உண்ணாவிரதம் துவக்கியுள்ள சங்கு கணேசன் இன்று மிகவும் பலவீனமாகக் காணப்பட்டார். அவர் உண்ணாவிரதம் தொடங்கி இன்றுடன் 12 நாட்களாகிறது!

பலவீனமாகிவரும் நிலையிலும் அவர், தனது கோரிக்கைகளில் கொண்டுள்ள உறுதியின் காரணமாக மிகுந்த உற்சாகத்துடன் காணப்பட்டார்.

ஆதரவாக!

சங்கு கணேசன் அவர்களது உண்ணாவிரதத்திற்கு ஆதரவாகவும் அவரது கோரிக்கைகளை ஈடேற்றக் கோரியும் 'காப்டன்' கேசவலு என்பார், நேற்று முதல் சாகும் வரை உண்ணாவிரதம் துவங்கியிருக்கிறார்.

கக்கன் சந்திப்பு

தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் கக்கன், நேற்று முன்தினம் சங்கு கணேசனைச் சந்தித்து உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு கோரினாராம்.

கோரிக்கைகள் பற்றி எதுவும் கூறியதாகத் தகவல் இல்லை.

மாணவர்கள்

நேரு பண்டிதர் சென்னைக்கு வரும்போது அவரைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று சில மாணவர்கள் கூறிய யோசனையை சங்கு கணேசன் நிராகரித்திருக்கிறார். அதுடன், போதுமான முன்னறிவிப்பின்றி பண்டித நேருவிடம் கேள்விகள் கேட்கவேண்டாம் என்றும் கூறியிருக்கிறார்.

நியாயம் வழங்க....!

இந்தத் தனது கோரிக்கைகளை ஈடேற்றுவது குறித்து, பண்டித நேரு தலையிட்டு நியாயம் வழங்க வேண்டும் என்றும் சங்கு கணேசன் கூறியுள்ளார்.

தூதுக் குழு

சென்னை கவர்னரைச் சந்தித்து நிலைமையை விளக்கச் சென்ற தூதுக்குழு ஒன்றை, கவர்னரின் செயலாளர், முதன் மந்திரியைப் பார்க்குமாறு கூறினாராம்; அதன்படி தூதுக்குழு முதன்மந்திரியைச் சந்தித்துக் கூறியபோது அவர், 'உண்ணாவிரதத்தை முதலில் சங்கு கணேசன் விட்டுவிட்டும், கோரிக்கைகளைப் பற்றிப் பிறகு கவனிக்கலாம்' என்றாராம்.

கூட்டம் கூட்டமாக....!

கூட்டம் கூட்டமாக சங்கு கணேசன் அவர்களை சென்னை மக்கள் சென்று பார்த்து வருகின்றனர்.

அவரது உடல்நிலை மிக மோசமாகிக்கொண்டுவருகிறது.

குகையில் கள்ள நோட்டுகள் தயாரிப்பு

ஈரோடு சன. 26—

ரூ 18 580 மதிப்புள்ள ஒரு ரூபாய் நோட்டுகளும், 33 பிளாக்குகளும், இதர துணைக் கருவிகளும், இரசாயனப் பொருள்களும் அச்சடிக்கும் இயந்திரமும், லைசென்ஸ் இல்லாத ஒரு ரிவால்வரும், சென்ற 20-ந் தேதி இரவு அம்மாப்பேட்டை எல்லைக்குள் உள்ள பால மலைக்கு அருகே 3 000 அடி உயரத்தில் உள்ள ஒரு குகையில் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கள்ளநோட்டு அச்சடித்த பகுதியிலேயே பலரைப் போலீசார் கைது செய்துள்ளனர்.

மறைவு

வேலூர் நகர தி. மு. கழக முன்னாள் செயலாளரும், மாவட்டப் பிரதிநிதியுமான தோழர் வி. ஆர். ஆதிமூலம் அவர்கள், 25-1-57 அன்று திடீரென இயற்கையெய்தினார். 26-1-57 பகல் 3 மணிக்கு வேலப்பாடி வேப்ப மர வீதியிலிருந்து புறப்பட்ட சவ ஊர்வலத்தில் நகர முக்கியஸ்தர்கள், கவுன்சிலர்கள், மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.

அன்னாரது மறைவு குறித்து வேலூர் நகரக் கிளையின் சார்பிலும், வ. ஆ. மாவட்டக் கழகச் சார்பிலும் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மறைந்த தோழர் ஆதிமூலம் அவர்களது குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக.

(ஆ - ர்.)

சென்னை-பெரம்பூர் தொகுதிகுழுக்கூட்டம்

சென்னை-பெரம்பூர் தொகுதி 6, 17, 18 19, 20, 21, 23, 24 வட்டங்களைச் சார்ந்த தி. மு. கழகக் கிளைகள், மன்றங்களைச் சார்ந்த தோழர்கள் வட்டத்திற்கு ஆறு பிரதிநிதிகள் அடங்கிய தொகுதிக்குழுக் கூட்டம் 29—1—57 செவ்வாய் மாலை 6-மணிக்கு, லட்சுமி டாக்கீஸ் அருகிலுள்ள 24-வதுவட்ட திரு. வி. க. படிப்பகத்தில் கூடும்.

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்து நடத்துவார்.

கழகக் கூட்டம்

★

நெல்லிக்குப்பம்:

ஆலை ரோடு, ஜட்புலிங்கம் பூங்கா பின்புறமுள்ள திடலில்
29—1—57 மாலை 5 மணிக்கு

தலைவர்:
ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ.,

பேசுவோர்:
க. அன்பழகன்
வி. கிருஷ்ணமூர்த்தி
சி. இளவழகன

தி. மு. கழகத் தேர்தல் நிதி நாடகம்:

2—2—57 இரவு 9 மணிக்கு, இராசிபுரத்தில் தி மு கழகக் கிளையின் சார்பில் தி மு கழகத் தேர்தல் நிதி நாடகம். நடிப்பிசைப் புலவர் கே ஆர். இராமசாமி, எம். என். கிருஷ்ணன் மற்றும் கே ஆர். ஆர் குழுவினர் நடிக்கும் 'வேலைக்காரி' நாடகம் நடைபெறும்.

வாணியம்பாடி வட்டார தி. மு. க. தோழர்களுக்கு:

"30—1—57 பிற்பகல் 2 மணிக்கு; வாணியம்பாடி வட்டார தி. மு. கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம், வாணியம்பாடி நியூ டவுன் எண் 66 இல்லத்தில், தோழர் சி. பி. சிற்றரசு தலைமையில் நடைபெறும். கிளைக் கழகச் செயலாளர்களும் உறுப்பினர்களும் தவறாது வருகைதர வேண்டுகிறோம்"

என, வ. ஆ. மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் முல்லை-சக்தி, வாணியம்பாடி கிளைக் கழகச் செயலாளர் ஏ. எல் முனிரத்தினம் ஆகியோர் கேட்டுக்கொள்கின்றனர்.

பாரதமாதா யார்?

'அரிச்சுவடி' கற்றுத் தருகிறார் பண்டித நேரு!

பாரத மாதா யார்?—என்று கேட்டு தானே விடையும் பகன்றாராம், பண்டித நேரு!

குழந்தைகளிடம் தாம் அடிக்கடி இந்தக் கேள்வியை எழுப்பியதாகவும், சரியான பதில் கிடைக்கவில்லை என்றும் கூறிய அவர், "நாம் அடிக்கடி, 'பாரத மாதாவுக்கு ஜே' என்று கூறுகிறோம்; ஆனால் பாரத மாதா யார் என்று கேட்டால், நமக்குத் தெரிவதில்லை; இந்த பரந்த நிலப்பரப்பில் வாழும் மக்கள் தான் பாரதமாதா; நாம் 'பாரத மாதாவுக்கு ஜே.' என்று கூவும்போது, நமக்கே 'ஜே' என்று கூறிக்கொள்ளுகிறோம்" என்று பண்டித நேரு விளக்கம் தந்தாராம்!

"பாரத மாதாவின் ஏதாவது ஒரு பாகத்திற்கு தீங்கு ஏற்பட்டாலும், அவள் சரியாக வேலை செய்ய முடியாது" என்றும் பண்டிதர் கூறினாராம்!

24-மனை தெலுங்கு செட்டியார் மகாசன சங்கச் சார்பில்!

வடசென்னை தொகுதிக்கு சட்டசபை அபேட்சகர் தேர்வு

"24-மனை தெலுங்கு செட்டியார் மகாசன சங்கத்தின் சார்பில் 24—1—57 இரவு 9-30 மணிக்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சென்னை சட்டசபைக்கு வண்ணாரப்பேட்டை தொகுதியிலிருந்து போட்டியிட திரு. எம். கோவிந்தராசலு செட்டியார் அவர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்"

என்று, சங்கத் துணைத் தலைவர் எஸ் மாரிமுத்து அறிவிக்கிறார்.

எதிர்பார்க்கிறார்களாம்!

இந்தியாவில் உள்ள கப்பல்களின் மொத்த டன் நிறைவு தற்போது 4,80 000 (ஜி ஆர்.) டன்னாகும். மொத்தம் 1,10,000 (ஜி ஆர்) டன் நிறையுள்ள கப்பல்கள், இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள கப்பல் கட்டும் தளங்களில் இப்பொழுது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இந்தியாவின் கப்பல் டன் நிறையை 6-இலட்சம் (ஜி ஆர்.) டன்னுக்கு உயர்த்த முதல் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலட்சிய அளவு 1957-ம் ஆண்டு மத்தியில் எய்தப்பட்டுவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கட்சி டிக்கட் வேண்டாம் என்கிறார் காங்கிரஸ் முதன் மந்திரி

ஜெயப்பூர், சன. 27—

இராஜஸ்தான் மாநில முதன் மந்திரி மோகன்லால் சுகாதியா, தான் தேர்தலில் காங்கிரஸ் டிக்கட்டில் நிற்க விரும்பவில்லை என்று தெரிவித்துவிட்டாராம்!

இராஜஸ்தான் மாநிலத்திற்கான காங்கிரஸ் அபேட்சகர் பட்டியல் தமக்குத் திருப்தி அளிக்காததாலேயேதான், காங்கிரஸ் டிக்கட்டைவேண்டாமெனக் கூறுவதாக அவர் கூறியிருக்கிறார்.

மேலிடம்

இவரது முடிவு கேட்ட காங்கிரஸ் மேலிடம் இவரை உடனடியாக டில்லிக்கு வருமாறு பணித்திருக்கிறதாம்.

1952—53-ம் ஆண்டு விலைநிலவரங்களின் அடிப்படையில், இந்தியாவின் மொத்த தேசிய வருமானம் ரூ. 10,800 கோடியாக இருந்தது; இரண்டாவது திட்டத்தில், தேசிய வருமானம் 13,400 கோடியாக இருக்கும்.

சென்னை—சைதையில் கே. வி. கே. சாமி மன்றத் திறப்பு விழா

29—1—57 மாலை 6 மணிக்கு சென்னை - சைதை காரணீசுவரர் தேரடி மைதானத்தில் மேற்படி மன்றத் திறப்பு விழா தோழர் பி. அண்ணாமலை தலைமையில் நடைபெறும்; தோழர்கள் ஏ வி பி ஆசைத்தம்பி, சைதை - சம்பந்தம் ஆகியோர் பேசுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம் ஏ அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ.